©
தமிழ்நாடு அரசு
2008

[Regd. No. TN/CCN/117/2006-08.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 43]

சென்னை, புதன்கிழமை, நவம்பர் 5, 2008
ஐப்பசி 20, திருவள்ளுவர் ஆண்டு–2039

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 45/2008**

***தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துவதைப் பொறுத்த அளவில், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகும்:—

குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2008–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் XIV/1947.

11–B எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

2. 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 11–A எனும் பிரிவுக்குப் பின்பு பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :—

**"11–B. ஒரு தொழிலாளர் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயமானது தனது தீர்ப்பினை தீர்ப்பாணையாக நிறைவேற்றுவதற்கான அதிகாரம்.**—ஒரு தொழிலாளர் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயமானது தனது சொந்தத் தீர்ப்பினை (Award) ஓர் உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பாணையாக நிறைவேற்றுவதற்கு, ஓர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்; மற்றும் அது 2–ஆம் பிரிவின் (p) எனும் கூறில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான தீர்வு (Settlement) எதனையும் ஒரு தீர்ப்பாணையாக நிறைவேற்றுவதற்கும் கூட அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது